# மேட்டுப்பாளையம் நகராட்சி

14 .12.2020ம் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

1

மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21–ன் கீழ் ரூ. 7.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 20557/2020/இ3, நாள் 11.12.2020ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி (ரூ. கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| மேட்டுப்பாளையம் | 7.00 | 5.95 | 1.05 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ.) | சாலையின் அகலம் (மீ.) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண் 4 சங்கர் நகர், வார்டு எண் 17 பங்களா மேடு, ராஜபுரம், வெங்கிடுசாமி வீதி ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைத்தல். | 2.220 | 4.70, 5.00 | 190.00 |
| 2. | வார்டு எண் 27உழவர் சந்தை ரோடு, பாரத்பவன் ரோடு, வார்டு எண் 30 ஜி.எம்.ஆர்.சி. ரோடு, வார்டு 31 அருண்நகர் மற்றும் பத்தரகாளியம்மன் கோவில் ரோடு (சக்கரவர்த்தி எதிரிலிருந்து சிவம் தியேட்டர் வரை) ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைத்தல். | 2.800 | 5.00, 6.00 | 182.00 |
| 3. | வார்டு எண் 10 சக்திநகர் மற்றும் பூவாத்தாள் லே அவுட், வார்டு எண் 12 கிருஷ்ணசாமி லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைத்தல் | 2.810 | 5.00 | 165.00 |
| 4. | வார்டு எண் 24 கெண்டையூர் பிரதான சாலை, வார்டு எண் 32 மணிநகர் சாலை, தாசம்பாளையம் சாலை மற்றும் வார்டு எண் 16 எம்.எஸ்.ஆர்.புரம் பகுதியில் மழைநீர் வடிகால் உடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 2.820 | 4.00, 4.50 | 163.00 |
| | மொத்தம் | 10.650 | | 700.00 |

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4540 /2020/இ1)

# மேட்டுப்பாளையம் நகராட்சி

31.12.2020ம் தேதி வியாழன் கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

**1**

மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவுப்பணியாளர்களுக்குத் தேவையான தளவாட சாமான்கள் கீழ்க்கண்டவாறு பெற்றிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.9,00,000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | இனங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சீமாறு(கைப்பிடி மூங்கில் குச்சியுடன்) | 400 எண்ணிக்கை |
| 2 | கால்வாய் மண்வெட்டி (மூங்கிலுடன்) | 400 எண்ணிக்கை |
| 3 | கை மண்வெட்டி (பிடியுடன்) | 100 எண்ணிக்கை |
| 4 | கடப்பாறை | 20 எண்ணிக்கை |
| 5 | அரிவாள் | 20 எண்ணிக்கை |
| 6 | பக்கெட் (மீடியம்) | 20 எண்ணிக்கை |
| 7 | முள்கொத்து (பிடியுடன்) | 200 எண்ணிக்கை |
| 8 | பெனாயில் | 100 லிட்டர் |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.4778/2020/எச்1

**2**

மேட்டுப்பாளையம் நகராட்சி கணினிணிப்பிரிவில் உள்ள இரண்டு பிரிண்டர்களின் பழுது அகற்றி இயக்கி கொடுப்பதற்கு 23.11.2020ல் விலைப்புள்ளி கோரியதற்கு 30.11.2020ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | m/s தரமணி பெண் ஸ்டேஷனரி பிரிண்டிங் கூட்டுறவு செசைட்டி லிட் 46, பீட்டர் ரோடு ராயப்பேட்டை சென்னை | ரூ.16,000/– | ரூ.15,585/– |
| 2 | m/s தாம்பரம் ஸ்டேஷனரி புக் பைண்டிங் கூட்டுறவு செசைட்டி லிமிடெட் 13,2வது கிராஸ் தெரு, தாம்பரம் | ரூ.16,000/– | ரூ.16,200/– |
| 3 | m/s மைலை எலக்ட்ரானிக்ஸ் கூட்டுறவு செசைட்டி லிமிடெட் 50/57 பகிர்ஹால் தெரு, சென்னை | ரூ.16,000/– | ரூ. 16,400/– |

**அலுவலகக் குறிப்பு :** மேலே பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் பெறப்பட்டுள்ள விலைப்புள்ளி மற்றதைவிட குறைவாக உள்ளதால் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s தரமணி பெண் ஸ்டேஷனரி பிரிண்டிங் கூட்டுறவு சொசைட்டி லிமிடெட் ராயப்பேட்டை சென்னை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று கணினி அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.4388/2020/இ1

| | |
|---|---|
| 3 | 2019–2020ஆம் ஆண்டில் மேட்டுப்பாளையம் நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணிகள் விவரத்தினை Kal publications (p) LTD என்ற நிறுவனம் மூலம் தினகரன் நாளிதழிலில் தொழில் மலரில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரம் கட்டணமாக ரூ.25000/–ஐ வழங்குமாறு KAL publications (p) LTD நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, இத்தொகையினை KAL publications (p) LTD நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2072/2020/இ1 |
| 4 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40M 9703க்கு தகுதிச்சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1,10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4494/2020/எச்1 |
| 5 | **பார்வை :– ந.க.எண்.5060/2020/இ1, நாள்.17.10.2019**<br>பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் அடிப்படையில் சட்டப்பேரவை விதி 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கையில் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் திறந்த வெளி உடன்பயிற்சி கூடம் மற்றும் யோகா மையம் அமைக்குமாறு அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேட்டுப்பாளையம் நகராட்சியில் ஒரு யோகா மையம் மற்றும் ஒரு திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் அமைக்க பார்வையல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டது.<br>மேலும் திறந்தவெளி உடற்பயிற்சி கூடங்கள் மற்றும் யோகா மையங்கள் ஏற்படுத்த பொது நிறுவனங்கள் தனியார் பங்களிப்பு மற்றும் உள்ளாட்சி பொதுநிதியினை பயன்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொடர் பராமரிப்பு செய்யும் வகையிலும் செயல்படுத்திட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து கீழ்க்கண்ட பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><table><tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை ரூ / இலட்சத்தில்</th></tr><tr><td>1</td><td>வார்டு எண் 30 ஜெயந்தி காலனி பகுதியில் யோகா மையம் அமைத்தல் பணி</td><td>ரூ. 10.00 இலட்சம்</td></tr><tr><td>2</td><td>வார்டு எண். 32, மணிநகர் பகுதியில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் அமைத்தல் பணி</td><td>ரூ. 10.00 இலட்சம்</td></tr></table>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1846/2020/இ1 |
| 6 | இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் விவரத்தினை தினமணி தொழில்மலர் 2020ல் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு Express publications (Madurai) Private Limited நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.30,000/– Bill No CBE TN 40055209 நாள்.25.10.2020 வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை இந்நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2072/2020/இ1 |
| 7 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2019–2020 ஆம் ஆண்டின் உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர் அவர்களால் தணிக்கை மேற்கொண்டு வரப்பட்ட பொதுநிதி, குடிநீர்நிதி, கல்விநிதி தணிக்கை அறிக்கை மற்றும் தணிக்கை குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண்.4890/2020/அ3 |

| | |
|---|---|
| 8 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40F 2273க்கு டயர்கள், டியூப் மற்றும் பிளாப்கள் புதிதாக பொருத்திட ஆகும் தோராய செலவினம் ரூ.1,00,000க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.04731/2020/எச்1 |
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN40M 9694க்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.1,10,000க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4521/2020/எச்1 |
| 10 | இந்நகராட்சிக்கு சொந்தமான அருண்நகரில் சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகம் பின்புறம் உள்ள பகுதியில் 10’ X 10’ அளவுள்ள RCC மற்றும் சிமெண்ட் அட்டை மேற்கூரை கொண்ட கட்டிடத்தை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர விளம்பர செலவினம் ரூ.10,000/–க்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.<br><br>மேற்படி இனத்திற்கு விளம்பரம் செய்தமைக்கான விளம்பரம் கட்டணம் ரூ.53406/– க்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது இதற்கான கூடுதல் செலவினம் மேற்கொண்டமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண். 2762/2020/அ1 |

11 மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூன்று குடிநீர்த் திட்டங்களில் பழைய குடிநீர்த் திட்டத்தில் குளோரின் வாயு **(Cylinder)** புதிய குடிநீர்த் திட்டத்தில் இருந்து வருவதால் குடிநீரில் குளோரின் குறைவாக வருவதால் புதிதாக மாற்றவும், வடிதளங்களில் உள்ள **Sluice** வால்வுகள் மாற்றி சுமார் 20 வருடங்களுக்கு மேல் ஆவதால் பழைய வால்வுகளை அகற்றிவிட்டு புதிதாக மாற்றவும், வடிதளங்களில் உள்ள பில்டர் மீடியாக்கள் மாற்றி ஏழு வருடங்கள் ஆவதால் வடிதளங்களில் உள்ள மீடியாக்கள் மாற்றவும், படிகாரம் வைக்க பழுதான மோட்டார்களை மாற்றி தொட்டியை சுத்தம் செய்து புதிதாக செயின் பிளாக் மாற்றவும், பழைய மற்றும் புதிய குடிநீர்த்திட்டங்களில் அடிக்கடி குப்பைகள் சேர்ந்து மோட்டாரின் ஸ்டைனர் **(Stainer)** அடைப்பு ஏற்படா வண்ணம் அவ்வப்போது சுத்தம் செய்ய செயின் ரோப் வைத்து சுத்தம் செய்யவும், நகராட்சி மேல்நிலைத் தொட்டிகளை வர்ணம் பூசவும், புதிதாக ஆழ்துளை கிணறுகள், பகிர்மானக் குழாய்கள் அமைக்கவும் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2020–2021 கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண் 7, 10, 32 ஆகிய பகுதிகளில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 10.00 |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பழுதான 10" Sluice Valve களை மாற்றி புதியதாக பொருத்துதல் | 10.00 |
| 3. | தலைமை நீரேற்று நிலையத்தில் 2Kg எலக்ட்ரோ குளோரினேட்டர் விநியோகம் செய்து இயக்கிக் கொடுத்தல் | 5.50 |
| 4. | தலைமை நீரேற்று நிலையத்தில் சேறுகள் அகற்ற புதிதாக செயின்பிளாக் மற்றும் உபகரணங்கள் அமைத்து இயக்கிக் கொடுத்தல் | 5.00 |
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு பகுதிகளில் புதிதாக பகிர்மானக்குழாய் அமைத்தல் | 7.50 |
| 6. | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு பகுதிகளில் புதிதாக பகிர்மானக்குழாய் அமைத்தல் | 7.50 |
| 7. | தலைமை நீரேற்று நிலையத்தில் தற்போது இருக்கும் 125HP ஸ்டாட்டரை அகற்றிவிட்டு புதியதாக விநியோகம் செய்து இயக்கிக் கொடுத்தல் | 5.50 |
| 8. | தலைமை நீரேற்று நிலையத்தில் கூட்டு குடிநீர்த் திட்டத்தில் வடிதளம் மாற்றுதல் | 10.00 |
| 9. | தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய குடிநீர்த் திட்டத்தில் வடிதளம் மாற்றுதல் | 5.00 |
| 10. | தலைமை நீரேற்று நிலையத்தில் புதிய குடிநீர்த் திட்டத்தில் வடிதளம் மாற்றுதல் | 10.00 |
| 11. | தலைமை நீரேற்று நிலையத்தில் படிகாரம் செல்லும் நீர்த்தொட்டி மாற்றி அதற்குண்டான உபகரணங்கள் மாற்றி படிகாரம் செலுத்துதல் | 3.00 |
| 12. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து மேல்நிலைத் தொட்டிகளிலும் காவலர் அறை மற்றும் கழிவறை கட்டுதல் | 5.00 |
| 13. | பங்களாமேடு நீருந்து நிலைய வளாகத்தில் உள்ள மேல்நிலைத் தொட்டி மற்றும் கட்டிடங்கள் வர்ணம் பூசுதல் | 10.00 |
| 14. | பழைய நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலைத் தொட்டி வர்ணம் பூசுதல் | 10.00 |
| | மொத்தம் | 104.00 |

<u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்
(3389 /2020/இ1)

| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழைய குடிநீர்த் திட்டம் ஆற்று நீரை நேரிடையாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. கூட்டுக் குடிநீர்த்திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நீரேற்றம் செய்யப்பட்டு பங்களாமேடு நீரேற்று நிலையத்தில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து மேல்நிலைத் தொட்டியில் நிரப்பப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. |
|---|---|

புதிய குடிநீர்த் திட்டத்தில் (New Scheme) ஆற்றிலிருந்து நேரிடையாக குடிநீரை நீரேற்றம் செய்து வடிதளங்கள் (Filter Beds) மூலம் சுத்தம் செய்யப்பட்டு நகரில் உள்ள நான்கு மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நான்கு மேல்நிலைத் தொட்டி ஆகிய இரு மேல்நிலைத் தொட்டிகளிலும் ஒரு நாள் விட்டு ஒருநாள் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

மணிநகர் மேல்நிலைத் தொட்டியில் நீரேற்றம் செய்யும் குடிநீர் மூன்று நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கே.கே.நகர் மேல்நிலைத் தொட்டியில் மோட்டார் வைத்து நீரேற்றம் செய்யப்படுவதால் நான்கு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஏதாவது மின்தடை மற்றும் மோட்டார் பழுதுகள், பைப் உடைப்பு ஏற்பட்டால் குடிநீர் விநியோகம் காலதாமதம் ஆகிறது. மேலும் நகரில் 25 வார்டுகளுக்கு ஒருநாள் விட்டு ஒருநாளும் , 4 வார்டுகளுக்கு மூன்று நாட்களுக்கு ஒருமுறையும், மீதி உள்ள 4 வார்டுகளுக்கு நான்கு நாட்களுக்கு ஒரு முறையும் சரி சமமில்லாத வகையில் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது ஒரே சமயத்தில் நான்கு மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்படுவதால் குடிநீரின் அளவு குறைவதால் தொலைவில் உள்ள மேல்நிலைத் தொட்டிக்கு சரியாக நீரேற்றம் செய்ய இயலவில்லை. மேலும் பாதாள சாக்கடை திட்டம் நடைபெற்று வருவதால் பிரதான சாலைகளின் குறுக்கே உள்ள சிறுபாலங்கள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. கீழ்க்காணும் குடிநீர் மேம்பாட்டு பணிகள் மற்றும் சிறுபாலம் கட்டுதல் பணிகளை மேற்கொள்ள அடிப்படை சதிகள் (Basic amenities) திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கக்கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.3 வெள்ளிப்பாளையம், வார்டு எண்.10 எஸ்.எம்.நகர், வார்டு எண். 9 மகாதேவபுரம், வார்டு எண்.21 போரேகவுடர் வீதி, வார்டு எண்.26 சுதா காலனி ஆகிய பகுதிகளில் 8 இடங்களில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் | 15.00 |
| 2 | தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து புதியதாக பம்பிங் மெயின் அமைத்து மோட்டார் பொருத்தி பழைய நகராட்சி அலுவலக மேல்நிலைத் தொட்டிக்கு விரைவாக நீரேற்றம் செய்து கே.கே.நகர் மேல்நிலைத் தொட்டிக்கு சீரான அளவு குடிநீர் விநியோகம் செய்தல் | 49.00 |
| 3 | தலைமை நீரேற்று நிலையத்தில் தற்போது உள்ள திறன் குறைந்த 50HP டர்பைன் பம்ப்பை அகற்றிவிட்டு புதிதாக 70HP டர்பைன் பம்ப் மாற்றுதல் | 25.00 |
| 4 | தலைமை நீரேற்று நிலையத்தில் தற்போது உள்ள திறன் குறைந்த 125HP HSC பம்ப்பை அகற்றிவிட்டு புதிதாக 125HP HSC பம்ப் மாற்றுதல் | 15.00 |
| | | 104.00 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1848/2020/இ1

**13** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான தள்ளுவண்டிகள் பழுதுபணிகள் மேற்கொள்வதற்கு கடந்த 23.12.2020 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டது இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது–

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர் ஸ்ரீ மூகாம்பிகை ஆட்டோ அண்ட் டீசல் ஒர்க்ஸ், கோயம்புத்தூர் | ரூ.4,98,900/– |
| 2 | திருவாளர் நீலகிரி ஆட்டோ கேரேஜ், மேட்டுப்பாளையம் | ரூ.4,95,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் நீலகிரி ஆட்டோ கேரேஜ், மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 4774/2020/எச்1

**14** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவுப்பணியாளர்களுக்கு தேவையான தளவாட சாமான்கள் பெற்றிட கடந்த 23.12.2020 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டது இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது–

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர் எஸ்.எஸ்.இன்ஜினியர்ஸ் கோவை | ரூ.6,85,560/– |
| 2 | திருவாளர் ஆறுமுகம், சங்கர் நகர், மேட்டுப்பாளையம் | ரூ.6,96,400/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் எஸ்.எஸ்.இன்ஜினியர்ஸ் கோவை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 4778/2020/எச்1

**15** மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து Old Scheme. Combined Scheme மற்றும் New Scheme என மூன்று திட்டங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகராட்சி பகுதிகளுக்கு கே.கே நகர், மணி நகர், பழைய நகராட்சி அலுவலகம், சங்கர் நகர், எஸ்.எம்.நகர், சி.ஐ.சி நகர் மற்றும் பூஸ்டர் மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

நீர்தேக்க தொட்டி உள்ள பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகள் என்பதாலும் மேலும் பொதுமக்கள் நலன் கருதி இப்பகுதிகள் அனைத்திற்கும் காவாலிகள் மூலம் காவல் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தற்பொழுது நகராட்சியில் குடிநீர் பிரிவில் உள்ள குழாய் பணியாளர்கள், மின்பணியாளர்கள் மற்றும் Fountain Cleaner ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளது. நகராட்சியில் மூன்று திட்டங்கள் மூலம் 6 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் விநியோகம் செய்ய நகராட்சிக்கு குடிநீர் சீரான முறையில் மேற்கொள்ள கூடுதலாக 31 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் இவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கோவை அவர்களின் செயல்முறை ஆணைப்படி ந.க.எண்7457/2020/இ3 நாள்.25.09.2020ல் நிர்வாகம் செய்யப்பட்ட கூலியுடன் ESI, CPF மற்றும் Insurance உடன் வழங்க நாட்களுக்கு வழங்க உத்தேசமாக ரூ.9.90 இலட்சம் ஆகும் மேற்கண்ட பணியினை அவுட்சோர்ஜிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இப்பணியினை குடிநீர்நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.268/2021/இ1

<table>
<tr><td>16</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் உயர்/நடு மின்னழுத்த மின் அமைப்புகள் Central Electricity Autherity (Measures Relating to safety and Electric Supply) Regulation 2010ன் ஒழுங்கு முறை வழி 30ன் கீழ் ஜனவரி 2021 திங்களில் மின்வாரியத்தால் ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதற்கு ஆய்விற்கான கட்டணம் ரூ.3300/—ஐ ஆய்வு முன்பணமாக செலுத்துமாறு மின் ஆய்வாளர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை மின் வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3639/2019/இ1</td></tr>
<tr><td>17</td><td>கோவை மாவட்டத்தில் அவினாசி சாலையில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை உயர்மட்ட சாலை அமைக்கும் பணிக்கு பூமிபூஜை விழா 03.12.2020ஆம் தேதியில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வினை கோவை மாவட்ட பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்ட அளவில் வெளியாகும் நாளிதழிலில் பிரசரிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் கோவை அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இவ்விளம்பரத்தினை தினத்தந்தி மலரில் கிராபிக் ஆர்ட்ஸ் இன்ஸ்டரிஸ் நிறுவனத்தின் மூலம் விளம்பரம் செய்யப்படதற்கு தொகை ரூ.181762/—ஐ வழங்குமாறு Invoice No Adct 4380 நாள் 03.12.2020 பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை கிராபிக் ஆர்ட்ஸ் இன்ஸ்டரிஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2072/2020/இ1</td></tr>
<tr><td>18</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் திட்டம் 2020—21ன் கீழ் 30.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண் .</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு ரூ இலட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு விழுக்காடு %</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பம்பிங் மெயின் பகிர்மானக் குழாய் உடைப்பு சரி செய்தல்</td><td rowspan="2">ரூ.5.00 இலட்சம்</td><td>திரு. எம். வேலுசாமி</td><td>0.01% மதிப்பீட்டிற்கு குறைவு</td></tr>
<tr><td>திருவாளர் ஜி.கே.எஸ் சேதுபதி</td><td>3.48% மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதிரு. எம். வேலுசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1848/2020/இ1</td></tr>
<tr><td>19</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 to 33 வார்டுகளில் உள்ள அனைத்து நீரதேக்கத் தொட்டியிலிருந்து செல்லும் குடிநீர் குழாய்களில் வால்வுபிட் தொட்டிகளில் உள்ள Cover Slab பழுதடைந்து மழைநீர் உள்ளே சென்று பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. மேலும் வாகன ஒட்டிகள் மிகவும் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணியை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1848/2020/இ1</td></tr>
<tr><td>20</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி மேற்கொள்ளப்படுவதால் அனைத்து முக்கிய சாலைகளும் சேதம் அடைந்து உள்ளது. இதனால் மழைக்காலங்களில் பொதுமக்கள் வாகனங்கள் இயங்குவதற்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும் வடகிழக்கு பருவமழை முடிவுற்றும் நிலையில் உள்ளதாலும் சாலை சேதம் அடைந்துள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி முக்கிய சாலைகளை சீரமைக்க (Patchwork) பணிகள் மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1846/2020/இ1</td></tr>
</table>

**21** மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.20 அண்ணா தினசரி மார்க்கெட் பின்புறம் உள்ள கட்டண கழிப்பிடத்தில் இருக்கைகள் (Closet) உடைந்தும், கதவுகள் மற்றும் தண்ணீர் குழாய்கள் துருபிடித்தம், மின்மோட்டார் பழுதடைந்தும், சுவரில் டைல்ஸ் உடைந்து மிகவும் மோசமாக உள்ளது என்று தெரிவித்துள்ளதற்கிணங்க நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4703/2020/இ1

**22** மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் நகரில் உள்ள நான்கு மேல்நிலைத் தொட்டியில் எடுக்கப்படடு நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நகரில் அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்களில் உடைப்பு ஏற்படுவதை சரிசெய்யவும், பொதுக்குழாய் மற்றும் பொதுவிநியோகத்திற்கு தேவையான உதிரிச் சாமான்கள் விநியோகம் செய்யவும் பைப் உடைப்பதற்கு தேவையான உதிரிசாமான்கள் விநியோகம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரு.5,00,000/–த்திற்கு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1848/2020/இ1

**23** மேட்டுப்பாளையம் நகராட்சி 2020–21 கல்விநிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 24.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் . | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5 வள்ளுவர் நகரவை பள்ளியில் தரைதளத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய வகுப்பறையில் நவீன வகுப்பறை அமைத்தல் மற்றும் Grun Board அமைத்தல் | ரூ.7.00 இலட்சம் | திருவாளர்.ப்யூசர் ஏரா | 0.32% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் Wc Works Corporation | 2.85% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.ப்யூசர் ஏரா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4015/2020/இ1

**24** மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2020–21ஆம் ஆண்டின் கல்விநிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 24.12.2020 ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் . | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5 வள்ளுவர் நகரவை பள்ளியில் முதல் தளத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய வகுப்பறையில் நவீன வகுப்பறை அமைத்தல் மற்றும் Green Board அமைத்தல் | ரூ.7.00 இலட்சம் | திருவாளர்.ப்யூசர் ஏரா | 0.32% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் Wc Works Corporation | 2.85% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.ப்யூசர் ஏரா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4016/2020/இ1

25 மேட்டுப்பாளையம் நகராட்சி 2020–21 ஆம் ஆண்டின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 24.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.20, நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நவீன வகுப்பறை அமைத்தல் | ரூ.5.50 இலட்சம் | திருவாளர்.ப்யூசர் ஏரா | 0.41% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் Wc Works Corporation | 3.58% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.ப்யூசர் ஏரா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4017/2020/இ1

26 மேட்டுப்பாளையம் நகராட்சி 2020–21 பொதுநிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 30.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான கணினிகள் பிரிண்டர் மற்றும் மடிக்கணினி வாங்குதல் | ரூ.4.25 இலட்சம் | திருவாளர்.சாகர் எலக்ட்ரானிக்கல்ஸ் | ரூ.4,23,620/– |
| | | | திருவாளர் சிஸ்கான் சிஸ்டம்ஸ் | ரூ.4,15,702.20/– |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.சிஸ்கான் சிஸ்டம்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1846/2020/இ1

27 மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.4, சங்கர் நகர் பகுதியில் பகவான் மகாவீர் நகரவை உயர்நிலைப்பள்ளியில் புதியதாக தரம் உயர்த்தப்பட்டு உயர்நிலைப்பள்ளியாக இயங்கி வருவதால் போதிய வகுப்பறை இல்லாமல் மாணவர்களின் கற்றல் சூழல் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அப்பள்ளியில் புதிய வகுப்பறை அமைக்க தோராய மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1847/2020/இ1

28 மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண். 17ல் உள்ள வ.உ.சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளியில் உள்ள துவக்கப்பள்ளி வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் தரைதளம், கதவு, ஜன்னல் மற்றும் வர்ணம் பூசுதல் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1847/2020/இ1

29 மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 32 மணிநகர் பள்ளியில் உள்ள வகுப்பறையில் உள்ள தரைதளம் மிகவும் பழுந்தடைந்துள்ளது மற்றும் வகுப்பறைகளில் முன்புறம் (palage) பகுதியில் மழைநீர் தேங்கி தரைதளம் மிகவும் மோசமாக உள்ளது. எனவே, வகுப்பறையில் உட்புரம் மற்றும் முன்புறம் தரைதளம் அமைத்து இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1847/2020/இ1

| | |
|---|---|
| 30 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, அண்ணா நகர் நகராட்சி பள்ளியில் மாணவர்கள் மதிய உணவு அமர்ந்து உள்ள பள்ளி வளாகத்தில் Shed அமைக்கவும் மற்றும் அத்யவசியமாக பணிகள் மேற்கொள்ள தலைமை ஆசிரியர் தெரிவித்தற்கிணங்க மேற்படி இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1847/2020/இ1 |
| 31 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 நேருஜி தொடக்கப்பள்ளியில் அமைத்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தில் மேற்கூரை மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் கட்டிடத்தின்குள் நுழைந்து பள்ளி மாணவர்களுக்கு இடையூராக உள்ளது மற்றும் தரைதளம் மிகவும் பழதடைந்துள்ளது. எனவே மேற்கூரை பழுது பார்க்கவும் மற்றும் தரைதளம் சரிசெய்யவும் ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1847/2020/இ1 |
| 32 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21, காட்டூர் பகுதியில் உள்ள நகராட்சி பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு வகுப்பறை போதுமானதாக இல்லை. மாணவர்களின் சேர்க்கை அதிகமானதால் பழைய வகுப்பறைகளின் முதல் தளத்தில் இரண்டு வகுப்பறைகள் தேவைப்படுகின்றன என கேட்டுக்கொண்டதற்கிணங்க வகுப்பறைகள்கட்ட தோராய மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1847/2020/இ1 |
| 33 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.32, மணிநகர் நகராட்சியில் பள்ளியில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுந்தடைந்து மோசமாக உள்ளது. இப்பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு சிரமமாக உள்ளது. எனவே, பழைய அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து புதிய அங்கன்வாடி மையம் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ. 9.80 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4953/2020/இ1 |
| 34 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 எஸ்.எம்.நகர் பள்ளி வளாகத்தில் பழைய Albustos கூரை அமைந்த கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளது மற்றும் அக்கட்டிடம் தேர்தல் வாக்குசாவடி கட்டிடம் என்பதால் அக்கட்டிடத்தை இடித்து புதிய இரண்டு வகுப்பறைகள் கட்ட ஆகும் தோராய மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1847/2020/இ1 |
| 35 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31, கே.கே.நகர் மேல்நிலைத் தொட்டிவளாகத்தில் நுழைவாயில் உள்ள சுவர் மிகவும் பழுதடைந்துள்ளதால் அச்சுவரை புதுப்பித்து கட்டவும் மற்றும் சில மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1848/2020/இ1 |
| 36 | மேட்டுப்பாளையம் நகராட்சி பல்வேறு இடங்களில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் ஒடைகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி இருப்பதால் மழைநீர் வடிகால் மற்றும் ஓடைகளில் மண் நிரம்பி சாக்கடை நீர் தேங்கி உள்ளதால் துர்நாற்றம் வீசி பொதுமக்களுக்கு மிகவும் இடையூராகவும் மற்றும் நோய்தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, துஊக்ஷ இயந்திரம் மூலம் ஒடைகளை மற்றும் மழைநீர் வடிகால்வை சுத்தம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1848/2020/இ1 |
| 37 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 அண்ணா நகர் பள்ளியில் மேல்தளத்தில் உள்ள வகுப்பறையின் மேற்கூரை மிகவும் பழுதடைந்து மோசமாக உள்ளது. எனவே, மாணவர்களின் பொதுநலத்தை கருதி மேற்கூரையை இடித்து புதிய வகுப்பறைகள் கட்ட ஆகும் தோராய செலவினம் ரூ.8.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1847/2020/இ1 |

| | |
|---|---|
| 38 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் புதிய குடிநீர்த்திட்டத்தில் ஆற்றில் இருந்து நீரேற்றம் செய்ய இரண்டு பம்பைன் பம்புகள் (50HP, 70HP) மாறி மாறி இயங்கி வருகின்றன. இதில் யூனிட் எண்–1 கடந்த **27.12.2021** அன்று இயங்கிக் கொண்டிருந்த போது அதிக இரைச்சலுடன் நின்று விட்டது. பம்பை பிளத்துப் பார்த்த போது பம்புவிட்டு புன்கள் இம்பள்ளர் நெக்னஸ் லைன்விட்டு போர்டுகள் தேய்ந்து உடைந்து இருந்தது தெரியவந்தது. மேலும் ஸ்டைனர் பழுதாகி உடைந்ததால் பம்பில் இப்பைகள் அடைப்பட்டு பழுதாகியுள்ளது. இரண்டு பம்புகள் உள்ள இடத்தில் ஒன்று பழுதானதால் மற்றொன்று தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளது. அதிலும் ஏதாவது பழுது ஏற்பட்டால் குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட வேண்டும். ஆதலால் பழுதான டர்பைன் பம்பில் புதிதாக ஷாட்டு, புன்கள் போர்டுகள், ஸ்டைனர் மற்றும் நெக்லிஸ் மாற்றவும் இம்பின்னர் கடைசல் வேலை செய்து இயக்கவும் ஆகும் உத்தேசசெலவினம் ரூ.4,25,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம்அனுமதி வழங்கலாம். |
| 39 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 வள்ளுவர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் சேர்க்கை அதிகமாக உள்ளதால் போதிய வகுப்பறைகள் இல்லாததால் மாணவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பழைய கட்டிடத்தின் முதல் தளத்தில் புதிய வகுப்பறைகள் அமைக்க ஆகும் தோராய மதிப்பீடு ரூ.9.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1847/2020/இ1 |
| 40 | இந்நகராட்சியில் 2020–21ம் ஆண்டிற்கான சொத்துவரி, தொழில்வரி, குடிநீர்கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களை மார்ச் 2021க்குள் 100% வசூல் செய்யப்பட்ட வேண்டியுள்ளது. இது சம்பந்தமாக இந்நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் அனைத்து வரி விதிப்புதாரர்களுக்கு சென்றடையும் வகையில் ஆட்டோவில் ஒலிபெருக்கி மூலம் வரி செலுத்தக் கோரி விளம்பரம் செய்வதற்காக ஆகும் உத்தேச செலவினமாக ரூ.3,00,000/– க்கும் இந்நகராட்சியில் தற்போது பொதுசுகாதாரப்பிரிவில் கொரோனா தடுப்பு சம்பந்தமாக விழிப்புணர்வு விளம்பரம் ஆட்டோவில் ஒலிபெருக்கி மூலம் நகர் முழுவதும் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. திரு.சி.நடராஜன் என்பவர் குறைந்த விலைப்புள்ளியில் பொதுசுகாதாரப்பிரிவு மூலம் ஆட்டோ விளம்பரம் செய்யப்பட்டு வருகிறார்.எனவே, திரு.சி.நடராஜன் அவர்களுக்கு மேற்கண்ட இனங்கள் சம்பந்தமாக ஆட்டோவில் அதே விலைப்புள்ளி விகிதத்தில் விளம்பரம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** :<br>1. அனுமதிக்கலாம்<br>2. இப்பணியிக் அவசர அவசியத்தினை முன்னிட்டு மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4839/2020/அ2 |
| 41 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைகளின்படி **FRL ( Finished Road Level)** சாலைகள் ஏற்கனவே உள்ள மட்டத்தின் மேல் புதிதாக சாலை அமைக்கும்போது சாலையின் உயரம் மிகாமல் சாலை அமைக்க அறிவுறுத்தப்பட்டது. இந்நகராட்யில் சிறப்பு சாலை திட்டம் 2020–21ன் கீழ் சிப்பம் 1 மற்றும் 4ன்படி பணி மேற்கொள்ளப்படும் சாலைகளில் ஏற்கனவே உள்ள மூல மதிப்பீட்டில் சாலைகளை தோண்டி எடுக்க வழிவகை இல்லாததால் அச்சாலைகளை தோண்டி எடுத்து அப்புறப்படுத்தவும், மழைநீர் வடிகால்மராமத்து பணி மேற்கொள்ளவும் ரூ. 5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 1846 / 2020/ இ1) |
| 42 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைகளின்படி **FRL ( Finished Road Level)** சாலைகள் ஏற்கனவே உள்ள மட்டத்தின் மேல் புதிதாக சாலை அமைக்கும்போது சாலையின் உயரம் மிகாமல் சாலை அமைக்க அறிவுறுத்தப்பட்டது. இந்நகராட்யில் சிறப்பு சாலை திட்டம் 2020–21ன் கீழ் சிப்பம் 2 மற்றும் 3ன்படி பணி மேற்கொள்ளப்படும் சாலைகளில் ஏற்கனவே உள்ள மூல மதிப்பீட்டில் சாலைகளை தோண்டி எடுக்க வழிவகை இல்லாததால் அச்சாலைகளை தோண்டி எடுத்து அப்புறப்படுத்தவும், மழைநீர் வடிகால்மராமத்து பணி மேற்கொள்ளவும் ரூ. 5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண். 1846 / 2020/ இ1) |
| 43 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சாமன்னா தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து மூன்று குடிநீர் திட்டங்கள் 1. பழைய குடிநீர் திட்டம், 2.கூட்டு குடிநீர் திட்டம், 3.புதிய குடிநீர் திட்டம் மூலமாக குடிநீர் சுத்தகரிக்கப்பட்டு மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீரேற்று செய்து விநியோகிக்கப்பட்டு வரும் நிலையம் ஒரு சில மேல்நிலைத்தொட்டிகள் சரிவர குடிநீர் நீரேற்றம் செய்ய முடியாத நிலையில் உள்ளபடியால் அதனை கண்காணிக்கும் பொருட்டு மேல்நிலைத்தொட்டிகளில் (Waterlevel Indicator) பொருத்தி இணையதளம் மூலம் கனிணி மற்றும் கைபேசி வாயிலாக அறிந்து கொள்ளவும் மேலும் குடிநீர் வீணாவதை தடுக்கவும் நல்ல முறையில் குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கவும் பழைய நகராட்சி அலுவலகம் மேல்நிலைத்தொட்டி கே.கே.நகர், மணிநகர், பங்களாமேடு, (Booster Station) மற்றும் சங்கர் நகர் மேல்நிலைத்தாளில் ஆகிய இடங்களில் உள்ள நீரிடன அளவு கண்டறிய 10 எண்ணிக்கை Waterlevel Indicator இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** : மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1848/2020/இ1 |

| | |
|---|---|
| 44 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 27 ஜவஹர்லால் நேரு பேருந்துநிலையத்தில் உள்ள துப்புரவு ஆய்வாளர்களுக்கான வார்டு அலுவலகத்தில் உள்ள தரைதளம், மிகவும் மோசமாக உள்ளது மற்றும் அங்குள்ள மழைநீர் வடிகால்களுக்கு கவர் Slap மற்றும் SS Hand Rails அமைக்க மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம்அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.4954/2020/இ1 |
| 45 | இந்நகராட்சிக்குட்பட்ட 12 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மைபணிகள் மேற்கொள்ளும் பணிக்கு திருவாளர் எஸ்.எஸ்.இஞ்ஜினியர்ஸ், கோவை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பணிவுத்திரவானது 03.10.2020 உடன் ஒப்பந்த காலம் முடிவடைவதாலும் தற்போது கொரோனா வைரஸ் காரணமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள காலதாமதம் ஏற்படும் என்பதாலும், பொது சுகாதாரம் மற்றும் பள்ளி ஆசிரியர்களின் நலநன கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்ற தற்பொது பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்னே அவர்கள் ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தத் தொகையின் அடிப்படையில் தொகை வழங்கவும் மேலும் மூன்று மாத காலத்திற்கு (04.10.2020 முதல் 03.01.2021) வரை பணி நீடிப்பு செய்து உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மன்றம்அனுமதிக்கலாம். முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும் தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.494/2020/எச்1 |
| 46 | இந்நகராட்சிக்குட்பட்ட 12 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மைபணிகள் மேற்கொள்ளும் பணிக்கு திருவாளர் எஸ்.எஸ்.இஞ்ஜினியப்ஸ், கோவை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பொது சுகாதாரம் மற்றும் பள்ளி ஆசிரியர்களின் நலநன கருத்தில் கொண்டு தற்பொது பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கே அவர்கள் ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தத் தொகையின் அடிப்படையில் தொகை வழங்கவும் மேலும் மூன்று மாத காலத்திற்கு (04.01.2021 முதல் 30.06.2021) வரை பணி நீடிப்பு செய்து உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மன்றம்அனுமதிக்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.494/2020/எச்1 |
| 47 | தமிழ்நாடு தலைமை தேர்தல் ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.6184/2020–21 நாள்.07.11.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றவும் முகவரி மாற்றம் செய்வது தொடர்பான முகாம் முறையே 21.11.2020, 22.11.2020 , 12.12.2020 மற்றும் 13.12.2020 ஆகிய தினங்களில் நடத்த உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 62 வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களிடமிருந்து சுமார் 3084 எண்ணிக்கையில் படிவங்கள் 6, 7,8,8ஏ பெறப்பட்டது. இப்படிவங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சிர் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கணினியில் பதிவு செய்யும் பணிக்கு ஒரு படிவத்திற்கு ரூ.5% வீதம் வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே, இதற்காகும் தோராய செலவினம் ரூ.16000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>மேற்கண்ட பணி தேர்தல் அவசர அவசிய பணியாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.182/2020/சி3 |
| 48 | திருவாளர் R.M.இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தாரால் மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.8 நகர் நல மையம் கட்டிடம் கட்டுதல் பணிக்கு பிடித்தம் செய்யப்பட்ட FSD தொகை ரூ.42000/– 2016–2017 காலங்கடந்த வைப்புத்தொகை (வருவாய் மூலதன நிதி) பதிவேடு பக்கம் எண்.3ல் வரிசை எண்.15ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.42000/–ஐ காலாவதியான வைப்புத்தொகையிலிருந்து திருவாளர் R.M.இன்ஜினியரிங் அவர்களுக்கு திருப்பி வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.3738/2020/அ3 |
| 49 | மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தில் கீழ்க்கண்ட பகுதிகளை சேர்க்காததால் பணியின் அவசியம் கருதி அப்பகுதிகளையும் இத்திட்டத்தில் சேர்த்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. கெண்டையூர் E.B.காலனி<br>2. போரையா கவுடர் வீதி<br><br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1819/2016/இ1 |

ஆணையாளர்,
மேட்டுப்பாளையம் நகராட்சி